





# ஹர ஹர சங்கரா

**FREE COPY**
May - 2026
Vol. 5 - ISSUE 07

தெய்வம் என்பது வெளியில் இல்லை,
உன் தர்மத்தில் இருக்கிறது;
தர்மம் தவறாத வாழ்வே,
அந்த பரமனை அடையும் வழியாகிறது.



# KODAMBAKKAM TIMES



SINCE 1974

# SHARADHA STORE



WMB

## (ஹோம்லி டேஸ்ட் • பணிவுடன் பணிவிடை)

No.96/51, Arya Gowda Road, West Mambalam,
Chennai - 600 033. Mobile : 98408 53429

---


Plot No: 39, Chinthamani Vinayagar Koil Street, (Opp. Periyar Park),
Ramakrishna Nagar, Valasaravakkam, Chennai - 600 087.
E-Mail : saibuju.rr@gmail.com. Ph: 98841 53428

---

15/5, Gandhi Street, Alwarthirunagar, Chennai - 600 087.
Ph: 044 - 2377 3233 / Mobile : 98841 53428

**இலவச வீட்டு டெலிவரி. உயர்தர அனைத்து விதமான மளிகை சாமான்கள் கிடைக்கும்**

**Available at Alwarthirunagar only. Timings 9 AM to 1 PM & 4 PM to 8 PM**



## சீர் பட்சணங்கள்

11 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
9 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
7 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
5 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
4 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
3 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்

| பருப்பு தேங்காய் கூடு வகைகள் | இனிப்பு வகைகள் |
|---|---|
| லட்டு கூடு<br>மணோகர கூடு<br>மைசூர்பாகு கூடு<br>தேங்கா பர்பி கூடு<br>கடலை கூடு<br>பொட்டுகடலை கூடு<br>முந்திரி கூடு<br>ஆசிர்வாத பருப்பு தேங்காய் கூடு | மைசூர்பாகு, லட்டு<br>அதிர்சம், பாதுஷா<br>சோமாசி<br>தேங்கா பர்பி<br>விருத அப்பம்,<br>காப்பரிசி,<br>புட்டு, வறுபயிறு<br>கிடைக்கும் |



மாம்பலம் சாரதா ஸ்டோர்ஸ்
நெய் மற்றும் வெண்ணெய்



**2489 3223**
**98408 53429**

# ஸ்ரீதன்வந்திரி
# ஆயுர்வேத மருத்துவமனை

6/11, பட்டேல் தெரு, கோடம்பாக்கம்
(ஜே.வி. மருத்துவமனை பின்புறம்)

## மகத்தான ஆயுர்வேத மருத்துவம்

**சிறப்பான மருத்துவர்களால் சிகிச்சை அளிக்கப்படும்.**

**சிறப்பு அம்சம்**

**நீண்டகால நோய்கள்/சர்க்கரை நோய் மற்றும்
அதன் பக்க விளைவுகள் சிகிச்சை.**

**பஞ்சகர்மா சிகிச்சை வீட்டில் மருத்துவம்
தங்கும் வகுதி உண்டு**

**044 2472 3585 / 91767 95514**

# முதியோர் இல்லம்

(ஜெ.வி. மருத்துவமனை மேல்மாடியில் நடத்தப்படுகிறது)

**சிறந்த மருத்துவர்களால்
24 மணி நேரமும்
பராமரிக்கப்படுகிறது.**




- சைவ உணவு
- தேவைக்கேற்ற மருத்துவ வசதிகள் / பராமரிப்பு
- பொழுது போக்கு வசதிகள் உண்டு
- வேண்டிய வசதிகள் செய்து தரப்படும்

31, ரெயில்வே பார்டர் ரோடு, கோடம்பாக்கம், சென்னை - 24.
(கோடம்பாக்கம் ரயில்நிலையம் அருகில்)

**98416 72952**

# சகுனங்கள் மூலம் நம் காரியத்தில் வெற்றி கிடைக்குமா?

மனிதன் எந்த ஒரு காரியத்திற்காகவும் வீட்டை விட்டு வெளியேறும்போது மனதில் ஒரு சிறிய அச்சமும், ஒரு பெரிய நம்பிக்கையும் இருக்கும். இந்த முயற்சி வெற்றி பெறுமா? இன்று தொடங்கும் வேலை நிறைவேறுமா? என்று எண்ணிய படியே பலர் நடந்து செல்வார்கள்.

நம் முன்னோர்கள் வாழ்க்கை அனுபவங்களின் மூலம் சில சகுனங்களை கவனித்து வந்தனர். அவை வெறும் மூடநம்பிக்கைகள் அல்ல நம் மனநிலையை உறுதிப்படுத்தும் ஆன்மீக அறிகுறிகளாக கருதப்பட்டன. இப்போது அவற்றை விரிவாகக் காண்போம்.

**நிறை குடம் : ஐஸ்வர்யத்தின் அறிகுறி**

கிராமப்புறங்களில் பொதுக் கிணறு அல்லது ஓடை அருகில் இருந்து பெண்கள் தண்ணீர் எடுத்துச் செல்லும் வழக்கம் இருந்தது. நாம் ஒரு முக்கிய காரியத்திற்காக வீட்டை விட்டு வெளியேறும் நேரத்தில் எதிரில் நிறைந்த குடத்தில் தண்ணீர் எடுத்துச் செல்லும் ஒருவர் வந்தால் அது மிகச் சிறந்த சகுனமாக கருதப்படுகிறது.

**நிறை குடம் எதை குறிக்கிறது?**

பூரணத்தை, செல்வ வளத்தை, மகாலக்ஷ்மி அருளை நிறைவுடன் தொடங்கும் நாள் நிறைவுடன் முடியும் என்பதே நம் முன்னோரின் நம்பிக்கை.

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar

**K K NAGAR & VADAPALANI EDITION**

COVERING AREA :

Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam

044 2484 4114 / 93826 82128 / 89390 70034

E-mail : kodambakkamtimes@yahoo.com



**சிரித்த முகம் :**

வெற்றியின் வாசல். நாம் செய்யப் போகும் காரியம் நன்றாக நடக்க வேண்டும் என்று மனதார வாழ்த்தி சிரித்த முகத்தோடு வழியனுப்பும் ஒருவர் எதிரில் வந்தால் அது மிகுந்த நல்ல சகுனம். நல்ல எண்ணம் கொண்டவரின் பார்வை நம் மனதிற்கே ஒரு உற்சாகத்தை தரும். அந்த உற்சாகமே வெற்றிக்கான முதல் படி.

**காகம் இடமிருந்து வலமாகச் செல்வது :**

காகம் நம் முன்னோர்களின் அடையாளமாகக் கருதப்படுகிறது. நாம் வெளியே செல்லும் போது காகம் இடமிருந்து வலமாக பறந்து சென்றால் அது காரியம் வெற்றி பெறும் அறிகுறி என்று சொல்லப்படுகிறது.

இதன் ஆழமான பொருள் என்ன? முன்னோர் ஆசீர்வாதம் நமக்கு துணை நிற்கிறது என்ற நம்பிக்கை.

**கர்ப்பிணி பெண்ணைக் காணுதல் :**

வாழ்க்கையின் உருவாக்கம் கர்ப்பத்தில் தொடங்குகிறது. வெளியே செல்லும் போது கர்ப்பிணி பெண்ணைக் காணுதல் புதிய தொடக்கத்திற்கும் நல்ல வளர்ச்சிக்கும் அடையாளமாகக் கருதப்படுகிறது.

நாம் தொடங்கும் காரியம் வளரும், விரியும், நிறைவேறும் என்ற நல்ல சகுனமாக இதை கூறுவர்.

**பிண ஊர்வலம் :**

மறுபிறப்பின் சின்னம். சிலர் ஆச்சரியப்படுவர் "பிண ஊர்வலம் நல்ல சகுனமா?" என்று. ஆனால் நம் பாரம்பரியத்தில் மரணம் என்பது முடிவு அல்ல மாற்றம். பழையது முடிந்து புதியது தொடங்கும் அறிகுறி என்று கருதப்பட்டது. எனவே முக்கிய காரியத்திற்குச் செல்லும் போது பிண ஊர்வலம் காணப்பட்டால் அந்த காரியம் நிறைவேறும் என்று நம்பப்படுகிறது.

**குலதெய்வ வழிபாடு :**

வெற்றியின் ஆதாரம். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்க வேண்டு மெனில் முதலில் குலதெய்வத்தை நினைத்து வேண்டிக் கொள்ள வேண்டும்.

குலதெய்வ அருள் இல்லாமல் எந்த காரியமும் பூரணமாக முடியாது என்பது நம் முன்னோரின் நிலையான நம்பிக்கை. மனதில் குலதெய்வத்தை நிறுத்தி தொடங்கும் எந்த காரியமும் தடையின்றி நிறைவேறும் என்று நம்பப்படுகிறது.

**காமாட்சி விளக்கு எண்ணெய் :**

வீட்டுப் பூஜையறையில் ஏற்றப்படும் காமாட்சி விளக்கின் எண்ணெயை சிறது நெற்றியில் இட்டு கொண்டு வெளியேறுவது நல்ல சகுனம் என்று சொல்லப்படுகிறது. இறைவனின் ஒளி நம்மோடு வருகிறது என்ற நம்பிக்கை. ஒளி இருக்கும் இடத்தில் இருள் நிலைக்காது. அதுபோல தடை இருக்கும் இடத்தில் வெற்றி மலரும்.

**தவிர்க்க வேண்டியது**

சுபகாரியத்திற்குச் செல்லும் முன் சண்டை போடக்கூடாது, கண்ணீர் விடக் கூடாது, கோபத்துடன் வீட்டை விட்டு கிளம்பக்கூடாது, அழுகையோ, சாபமோ, மனவருத்தமோ ஏற்பட்ட நிலையிலே தொடங்கும் காரியம் தடுமாறும் என்று நம்பப்படுகிறது. அமைதியான மனம் வெற்றியின் அடித்தளம்.

**சகுனங்களின் உண்மையான பொருள் :**

சகுனங்கள் வெளியில் தோன்றும் அறிகுறிகள் மட்டுமல்ல அவை நம் மனநிலையை ஒழுங்குபடுத்தும் ஆன்மீக உந்துதல்கள். நம்பிக்கையுடன் தொடங்கும் காரியம் பாதி வெற்றியை அடைந்துவிட்டதாகும். அதனால் சகுனங்களை மரியாதையுடன் கவனித்து, நல்ல எண்ணத்துடன் வாழ்ந்தால் வாழ்க்கை மேலும் சிறக்கும்.



# பஞ்சாம்ருதம்

**கானாம்ருதம் :** ஸ்ரீரங்கம் (ஸ்ரீரங்கநாதன்)
**ஜீவாம்ருதம் :** திருமலை (ஸ்ரீநிவாஸன்)
**தேவாம்ருதம் :** காஞ்சி (வரதன்)
**ராமாம்ருதம் :** மேலக்கோட்டை (ஸ்ரீசம்பத்குமாரன்)
**கீதாம்ருதம் :** திருவல்லிக்கேணி (ஸ்ரீபார்த்தசாரதி)

# கோடீஸ்வர யோகம் தரும் ஏலக்காய் மாலை

இந்த உலகில் வாழ்வதற்கு அறிவும் முயற்சியும் அவசியம். அதோடு பொருளாதார நிலைத்தன்மை இருந்தால் மட்டுமே வாழ்க்கை நிம்மதியாகவும் சிறப்பாகவும் அமையும். ஆன்மிக நம்பிக்கைகளின்படி செல்வத்திற்கும், செழிப்பிற்கும் அதிபதியாக மகாலட்சுமி தேவி வணங்கப்படுகிறார். நறுமணம் நிறைந்த இடங்களில் மகாலட்சுமியின் அருள் வாசம் செய்வதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அதனால்தான் மணமிக்க பூக்கள், தூபம், தீபம், மூலிகைச் செறிவு கொண்ட பொருட்கள் ஆகியவை மகாலட்சுமி வழிபாட்டில் முக்கிய இடம் பெறுகின்றன. அந்த வரிசையில் கிராம்பு மற்றும் ஏலக்காய் இரண்டும் தனித்துவமான ஆன்மிகச் சிறப்பைக் கொண்டவை.

**கிராம்பு - ஏலக்காய் : சாதாரண சமையல் பொருள்களா?**

பலரும் கிராம்பையும், ஏலக்காயையும் சமையலில் பயன்படுத்தும் பொருட்களாக மட்டுமே நினைக்கிறோம். ஆனால் உண்மையில் இவை இரண்டும் மூலிகை தன்மை கொண்ட தாவரப் பொருட்கள், இயற்கையான நறுமண சக்தி நிறைந்தவை, மனதை அமைதிப்படுத்தும், சூழலை தூய்மைப்படுத்தும் தன்மை உடையவை.

ஆன்மிக ரீதியாக இந்த நறுமணம் செல்வ சக்தியை ஈர்க்கும், வீட்டில் சுபகாரியங்களை நிலைநிறுத்தும் என்று நம்பப்படுகிறது. அதனால் தான் மகாலட்சுமி தேவிக்கு மிகவும் விருப்பமான பொருட்களாக கிராம்பும், ஏலக்காயும் கருதப்படுகின்றன.


SREE MANGALAGURU JOTHIDA NILAYAM

'VAAZHVIL VELICHAM'

SURESH MADHAVAN

93609 45818

(With Appointment Whatsup Only)




**ஏன் பணம் வந்தாலும் நிலைக்கவில்லை?**

பலரின் வாழ்க்கையில் ஒரு விசித்திரமான அனுபவம் இருக்கும். வருமானம் வந்து கொண்டே இருக்கும் ஆனால் சேமிப்பு நிலைக்காது திடீர் மருத்துவச் செலவுகள், வாகன பழுதுகள், இயந்திர கோளாறுகள், தேவையற்ற செலவுகள் இப்படி பணம் வந்து போகும் நிலையிலேயே இருந்து விடும்.

ஆன்மிகக் கோணத்தில் இதை "மகாலட்சுமியின் அருள் முழுமையாக நிலைக்கவில்லை" என்று முன்னோர்கள் கூறினார்கள்.

அந்த அருளை நிலைபெறச் செய்ய ஒரு எளிமையான ஆனால் ஆழமான வழிபாடு தான் ஏலக்காய், கிராம்பு மாலை வழிபாடு.

---

# நம்மரெண்டு பேருக்கும் ஒரே தொழில்தான்

....... மஹாபெரியவா

"மிளிறும் நகைச்சுவையும் பக்தர்களை தனக்கு சமமாக பாவிக்கும் உயர்ந்த உள்ளமும்" எப்பொழுதும் மஹாபெரியவாளுக்கு உண்டு.

ஒருமுறை ஸ்வாமிகள் மஹாராஷ்ராவில் ஒரு கிராமத்தின் சாலையோரம் முகாமிட்டிருந்தார்கள்.

அப்போது அந்த வழியாக நான்கு பேர்கள் ஒரு யானையின் மீது ஏறிக்கொண்டு சென்றுகொண்டிருந்தார்கள். ஸ்வாமிகள் அவர்களைப் பார்த்ததும் மடத்தின் சிப்பந்தியைக் கூப்பிட்டு அவர்களை அழைத்துவரச் சொன்னார்கள். அவர்களும் யானையைவிட்டு இறங்கி வந்து ஸ்வாமிகளை சேவித்துவிட்டு கைகட்டி நின்றார்கள்.

ஸ்வாமிகள் அவர்களைப் பார்த்து "யார் நீங்கள்? யானையின் மீது ஏறிக்கொண்டு எங்கு செல்கிறீர்கள்?" என்று வினவினார்.

அவர்களும் பவ்யமாக "ஸ்வாமிகளே நாங்கள் ஒருகாலத்தில் செல்வந்தராக இருந்தோம். எங்கள் தகப்பனார் எல்லாவற்றையும் தானம் தருமம் செய்து பின்னர்

எஞ்சிய யானையை எங்களுக்கு அளித்து அதன் மூலம் பிழைத்துக்கொள்ளச் சொன்னார். நாங்களும் அதன் மீது ஏறிக்கொண்டு ஊர் ஊராகச்செல்வோம். பக்திப்பாடல்கள் பாடுவோம், புராணக் கதைகளைச் சொல்லுவோம். எங்களுக்கும் பொருள் கிடைக்கும் யானைக்கும் தீனி கிடைக்கும் இப்படி எங்கள் ஜீவனம் செல்லுகிறது என்றார்கள்.

அதற்கு ஆசார்ய ஸ்வாமிகள் புன்சிரிப்புடன் கூறினார். இங்கேயும் இதான் நடக்கிறது. இவா என்னை யானை மாதிரி ஊர் ஊராக அழைத்து கொண்டு செல்கிறார்கள். நானும் அங்கே போய் உபன்யாஸம் செய்கிறேன் ஸ்லோகங்களைப் பாடுகிறேன். போற இடத்தில் இவாளுக்கும் சாப்பாடு பணம் எல்லாம் கிடைக்கிறது. எனக்கும் பூஜை செய்ய இடம், பக்தர்கள் எல்லாம் கிடைக்கிறாகள். நம்மரெண்டு பே ருக்கும் ஒரே தொழில்தான்" என்றார். மஹாஸ்வாமிகள். கூடியிருந்த பக்தர்கள் ஸ்வாமியின் நகைச்சுவை உணர்ச்சியையும் பக்தர்களை தனக்கு சமமாக பாவிக்கும் உயர்ந்த உள்ளத்தையும் கண்டு மெய்சிலிர்த்தார்கள்.



ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர

**மஹா பெரியவா அருள்வாக்கு :**

தினமும் அரைமணி நேரமாவது மவுனமாக இருக்கப் பழக வேண்டும். ஜாடை காட்டுவது கூட கூடாது.

விரதம் மேற்கொள்ளும் நாளில் மவுனத்தையும் கடைபிடித்தால் வாய், வயிற்றுக்கு வேலை இல்லாமல் போய்விடும். அதனால் அன்று நாள் முழுதும் கடவுள் பக்தியில் ஒன்றுவதற்கு ஏதுவாகும்.


சிக்கனத்தை ஒருவன் கடைபிடித்தால் கடன் வாங்க வேண்டிய அவசியம் இருக்காது. மற்றவர்களுக்கு இயன்ற உதவிகளையும் செய்ய முடியும்.

திருமணத்தை பொருளாதாரப் பிரச்னையாக மாற்றியிருப்பது அநியாயம். வரதட்சணை வாங்குவது திருடுவதற்குச் சமம்.

உலகத்தைப் படைத்து ஒரு கட்டுப்பாட்டில் நிலைநிறுத்தி வைத்திருக்கும் பெரிய அறிவு ஒன்று இருக்கிறது. எங்கும் நிறைந்திருக்கும் அந்த அறிவாற்றலையே கடவுள் என்று குறிப்பிடுகிறோம்.

தன் கையே தனக்கு உதவி என்று மட்டும் எண்ணாமல் அந்தக் கையால் மற்றவர்களுக்கும் முடிந்த உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும்.


# பல்வேறு துறைகளின் தந்தை



**Maharishi Parashara**
Father of Biology
(Vrikshayurveda)




**Maharishi Charaka / Sushruta**
Father of Zoology
(Animal Classification)



**Rishi Ved Vyasa**
Father of History
(The Itihasa Tradition)




**Maharishi Parashara**
Father of Botany
(Plant Anatomy/Soil Science)




**Aryabhata / Brahmagupta**
Father of Algebra
(Negative numbers/Eqns)




**Rishi Baudhayana**
Father of Geometry
(Sulba Sutras)



**Aryabhata**
Father of Trigonometry
(Introduction of Jya & Kojya)




**Aryabhata**
Father of Mathematics
(Place value system & Zero)



**Maharishi Charaka**
Father of Medicine
(Charaka Samhita)



**Maharishi Sushruta**
Father of Surgery
(Sushruta Samhita)




**Maharishi Charaka**
Father of Homeopathy (Concept)
(Samanah Samanena principle)




**Acharya Nagarjuna**
Father of Chemistry (Alchemy)
(Rasashastra)




**Acharya Dhanvantari**
Father of Microbiology
(The study of Krimi)




**Maharishi Charaka**
Father of Genetics
(Genetic inheritance/Beeja logic)




**Maharishi Charaka**
Father of Taxonomy
(Anatomical classification)



**Maharishi Charaka**
Father of Blood Groups (Physiology)
(Circulation of Rakta)




**Acharya Chanakya**
Father of Economics
(Arthashastra)



**Acharya Pingala**
Father of Statistics
(Combinatorics in Chandaḥśāstra)




**Rishi Agastya**
Father of Electricity
(Agastya Samhita - Battery/Mitra-Varuna Cell)




**Maharishi Bharadwaj**
Father of Electromagnetism
(Vimana Samhita - Energy manipulation)




**Acharya Jagadish Chandra Bose**
Father of Electronics
(Microwave/Semiconductor research)



**Acharya Kanada**
Father of Periodic Table (Elements)
(Nine Dravyas classification)



**Acharya Panini**
Father of Computer Programming
(The Ashtadhyayi Algorithms)




**Acharya Pingala**
Father of Coding Logic
(Binary Number System)



**Acharya Jagadish Chandra Bose**
Father of Wireless Communication
(Radio/Millimeter Waves)




**Ancient Logicians**
Father of Information Connectivity
(Concept of Jala/Indra's Net)



**Acharya Panini**
Father of Search/Data Retrieval
(Meta-rules for linguistic processing)




**King Bhoja**
Father of Robotics
(Mechanical Automata in Samarangana Sutradhara)




**Ancient Indian Inventors**
Father of Strategy Gaming
(Creators of Chaturanga)




**Maharishi Vishwakarma**
Father of Civil Engineering
(Vastu Shastra)




**Maharishi Vishwakarma**
Father of Architecture (Ancient)




**Brahmagupta / Bhaskaracharya**
Father of Classical Physics (Gravity)




**Bohanka Kanata**
Father of Clanical Physics



**Acharya Kanada**
Father of Atomic Physics



**Acharya Nagarjuna**
Father of Nanotechnology (Concept)



**Rasa-Shastris**
Father of Nanotechnology (Practical)

# சிலைக்குள் ஒரு இதயத் துடிப்பாம்



........ ஓர் ஆன்மீக அதிசயம்

மத்தியப் பிரதேச மாநிலம் ததியா மாவட்டம் (ஜான்சி அருகில்) பக்காரா (**Pachhara**) கிராமத்தில் அமைந்துள்ள சித்த பீடம் தசஷின்முகி ஹனுமான் கோயிலில் தான் இந்த அதிசயம் நடப்பதாகக் கூறப்படுகிறது. இங்குள்ள ஹனுமான் சிலையில் உயிருள்ள மனிதர்களுக்கு இருப்பது போன்றே இதயத் துடிப்பு கேட்பதாக பக்தர்கள் நம்புகிறார்கள்.

சிலையின் நெஞ்சுப் பகுதியில் காதை வைத்து அல்லது ஸ்டெதாஸ்கோப் கொண்டு கேட்டால் "லப்-டப்" என்ற சத்தம் கேட்பதாகச் சொல்லப்படுகிறது.

சிலையின் நரம்புகளில் இரத்தம் ஓடுவதாகவும், சில நேரங்களில் சிலையிலிருந்து வியர்வை சிந்துவதாகவும் அங்குள்ளவர்கள் சிலிர்ப்புடன் கூறுகிறார்கள். சில மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஸ்டெதாஸ்கோப் மூலம் பரிசோதித்து இந்த சத்தம் கேட்பதை உறுதி செய்துள்ளதாக உள்ளூர் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**அறிவியல் vs ஆன்மீகம் :**

அறிவியல் ரீதியாக ஒரு கல்லுக்குள் இதயத் துடிப்பு இருக்க வாய்ப்பில்லை என்றாலும், பாறையின் அமைப்பு அல்லது காற்றின் அழுத்தம் காரணமாக இத்தகைய சத்தம் ஏற்படலாம் என்று சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இருப்பினும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் இதை ஒரு தெய்வீக சக்தியாவும், ஹனுமான் இன்றும் அங்கே உயிருடன் வாழ்வதற்குச் சான்றாகவும் பார்க்கிறார்கள். சித்தர்கள் சொன்னது போல நம்பிக்கையே அனைத்திற்கும் அடிப்படை.


RAMA YATRA
5100 BCE
Nandi Gram
Bharat receives Rama after return
Shringaverpur
na, Sita, Lakshma cross River Ganga
Prayagraj
Rama visits Rishi Bharadwaj
Chitrakoot
Bharat requests Rama to return
Rama conducts Raja Dashrath Shrada
a visits Rishi Ailli & Ansraiya Ashram
Rama meets Rishi Sharhbanga
Dandaka Forest
ma, Sita, Lakshma lived for 10 years
Panchvati Nasik
Surparakha Encounter
Surparaha Encounter
Rama kills Khar & Dushan
Ravana kidnaps Sita
Ramdurg
Rama meets Sabari Sabari
offered berries
Kishkinda Hampi
Rama meets Hanuman
and Vall mfeet &
Sugreeva defeat Vall
Mahendragiri
Rishi Agastya Ashram
Ramanathpuram
Vibishana comara to Rama
Dhanushkodi
Construction of
the Ram Setu
begins
Rameshwaram
Kusa
Lava
Ayodhya
Capital, Kosala Kingdom
Birthplace of Shri Rama
Rishi Valmiki
Ashram
Tamia
Sitamadni
Birthplace of Sita
Saryu
Ganga
DANDAKA
FOREST
Rishi - rishi
Vanara - sita
Lepakshi
Jatayu fights Ravaria
Thiruppukuzhi- Kanchipura
Jatayu dahan by Rama
Varuna
Devta
Kodikarai - Ramar Padar
Rama views the Ocean array
Suvela - Ramboda
Vanara army battle array
Ashok Vatika
Sita captive
Lanka

# வைகாசி விசாகம்



வைகாசி மாதத்தில் வரும் விசாக நட்சத்திரம் சிறப்பு பெற காரணம் இந்நாளில் தான் முருகப் பெருமான் அவதரித்தார். ஈசனின் நெற்றிக் கண்களில் இருந்து தோன்றிய முருகனுக்கு கந்தன் என்ற பெயரும் உண்டு.

**புராணக் கதை :**

சிவபெருமானிடம் வரம் பெற்ற சூரபத்மன் மற்றும் அவனின் சகோதரர்களால் பல ஆண்டுகள் இன்னல்களுக்கு ஆளான தேவர்கள் தங்கள் துயர் நீங்க சிவபெருமானிடம் முறையிட மனம் கனிந்த இறைவன் தனது பழமையான ஆறுமுகங்களான ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், அதோமுகம் எனும் திருமுகங்களிலிருந்து தீப்பொறியை தோன்றச் செய்ய அப் பொறிகளால் உண்டான வெப்பமும், சத்தமும் அம்பிகை மற்றும் தேவர்களை நடுங்கச் செய்தது. பின்னர் அப்பொறிகளை சிவனின் ஆணைப்படி அக்னி மற்றும் வாயு தேவன் கங்கையில் விட, கங்கை அப்பொறிகளை சரவண பொய்கையில் கொண்டு சேர்க்க அப்பொறிகள் வைகாசி விசாகம் அன்று ஆறு குழந்தைகளாக மாறின. அக் குழந்தைகளை அம்பிகை வாரி அணைக்க ஆறுமுகம் கொண்ட ஒரு குழந்தையாக மாறியது.

விசாக நட்சத்திரம் ஞானத்திற்குரிய நட்சத்திரமாகும். விசாக நட்சத்திரத்தில் புது உருவம் கொண்டவர் என்பதால் முருகன் விசாகன் என்ற பெயரும் பெற்றார். விசாகன் என்ற சொல்லுக்கு மயிலை வாகனமாக உடையவர் என்ற பொருளும் உண்டு. இதனால் வைகாசி விசாகத்தன்று வேலையும், மயிலையும் மறவாது வணங்கி முருகனின் திருவருளை பெறலாம்.

வைகாசி விசாகத்தன்று கோயிலுக்கு சென்று முருகனுக்கு பல விதமான

காவடிகள் மற்றும் பால் குடம் எடுத்து தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்றும் பக்தர்கள் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. அன்று முருகனுக்கு விரதம் இருந்து வீட்டில் பூஜை செய்வதும் சிறந்த நன்மை பயக்கும். அன்று பூஜை அறையில் விளக்கேற்றி வேலவனுக்கு உகந்த மலர்களான அரளி, செம்பருத்தி போன்ற செந்நிற புஷ்பங்களை கொண்டு படத்திற்கு மாலை சாற்றி அலங்கரித்து ஆறெழுத்து மந்திரமான ஓம் சரவண பவ எனும் மந்திரத்தையும், திருப்புகழ், கந்த சஷ்டி கவசம் போன்ற ஸ்லோகங்களையும் கூறி அர்ச்சனை செய்ய வேண்டும். சர்க்கரை பொங்கல் மற்றும் எலுமிச்சை சாதம் நைவேத்தியம் செய்து அன்னதானம் செய்வது நல்ல பலன்களைத் தரும். முழு நாளும் விரதம் இருக்க முடியாதவர்கள் பால் மற்றும் பழம் ஒரு வேளை உண்டு விரதத்தை மேற் கொள்ளலாம்.

அன்று கோவில் மற்றும் வீடுகளில் முருகப் பெருமான் மற்றும் வேலுக்கு செய்யப்படும் பலவிதமான அபிஷேகங்களுக்கு உரிய பலன்களை அறிந்து கொள்வோம்.

1. பால் அபிஷேகம் : ஆயுள் அதிகரிக்கும்
2. பஞ்சாமிர்த அபிஷேகம் : நினைத்த காரியம் நிறைவேறும்
3. சந்தன அபிஷேகம் : சரும நோய்கள் நீங்கும்
4. பன்னீர் அபிஷேகம் : செல்வ வளம் பெருகும்
5. பச்சரிசி மாவு அபிஷேகம் : தீராத கடன்களும் தீரும்

தம்பதிகளாக விரதம் இருந்து வழி படுவர்களுக்கு நன் மக்கட்பேறு உண்டாகும், பகைவர் தொல்லை நீங்கும், தாம் மேற்கொள்ளும் அனைத்து காரியங்களிலும் ஏற்படும் தடை நீங்கி வாழ்வு உயர வழி பிறக்கும். வளத்தை அள்ளி வழங்கும் வைகாசி விசாகம் அன்று நாமும் விசாகனை வழிபட்டு நலம் பெறுவோம்.

........ ஹேமலதா க்ருஷ்ணகுமார்



**திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் கோவிலில் உள்ள ஸ்ரீ ராமன் சிலை. இந்த சிலை 1000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது.**

# KRISHNA DELISH COFFEE




## எங்களிடம் தரமான காபி
## கொட்டை அரைத்து தரப்படும்
## 1 கிலோ காபி பவுடர்
## ரூ 920 மட்டுமே

* Condition Apply

---

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS. 20 only

**COFFEE POWDER DOOR DELIVERY FREE ALSO AVAILABLE**

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

Mylapore Ganapathy's
CELEBRATING 84 Years
ANNIVERSARY
Since 1942

## It's our 84th Birthday, but we chose to gift you !

## Vadu Mango : Buy 1 Get 1 Free*




₹ 170
(250g + 250g)

Mylapore
Ganapathy's®
Since 1942

**BUTTER & GHEE**

**MYLAPORE BRANCH :**
# 14, Chitrakulam West Street,
( Near P.K.Mahal Kalyana Mandapam )
Mylapore, Chennai - 600 004
Tel : 044-2464 0292, 89390 27272

**WEST MAMBALAM BRANCH :**
# 50, Arya Gowda Road,
( Near Shobanaa Kalyana Mandapam )
West mambalam, Chennai - 600 033
Tel : 044-4856 6363, 89390 36363

*Conditions Apply:
- Stock available from 03rd May 2026
- Offer valid till stock available

Each Jar contains Vadu mango of 250g net and cannot be sold as single unit

SHOP ONLINE www.mylaporeganapathys.com